பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 171

சனிக்கிழமை
17 மே 2025

வைகாசி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

### சங்கிலி அறுப்பு பெண் கைது!

யாழ்ப்பாணம், மே 17
சண்டிலிப்பாயிலுள்ள ஆலயமொன்றின் இறுதிநாள் உற்சவத்தின்போது, சங்கிலி அறுப்பில் ஈடுபட்ட பெண்ணொருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

12

### ஆலய உண்டியல் உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், மே 17
நவாலியில் பிட்டியம்மன் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்

15

மூன்று அடி ஆழத்தில் பேரதிர்ச்சி

# செம்மணிப் புதைகுழியில் முழு என்புத்தொகுதி மீட்பு

## மண்டையோடு ஒன்றும் அகழ்ந்தெடுப்பு



யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம் - செம்மணி, சிந்துபாத்தி மயானத்தில் மேற்கொள்ளப்படும் அகழ்வுப்பணிகளின் இரண்டாம் நாளான நேற்று, வெறும் மூன்று அடி ஆழத்தில் முழுமையான என்புத்தொகுதியொன்றும், மண்டையோடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. இந்த மனிதச் சிதிலங்கள், அந்தப் பகுதி ஒரு பெரும் மனிதப் புதைகுழியா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

15

### நுரையீரலில் கிருமி சிசு பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், மே 17
காய்ச்சல் மற்றும் சளி காரணமாக, நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு இரண்டு மாதங்களேயான ஆண்குழந்தையொன்று பரிதாபமாக

15

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்; கோரப்பட்டது மக்கள் கருத்து!

கொழும்பு, மே 17
இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக மக்களின் கருத்துக் கோரப்பட்டுள்

15

### கப்பல் மூலம் குஷ் கடத்தல் இந்தியர் கைது

விரிவு பக்:- 12

### அநுர அரசாங்கத்தின் மீது வடக்கு மக்களும் அதிருப்தி

நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, மே 17
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வடக்கு மக்களும் முழு அதிருப்தியில் உள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

15




‘அப்ப கெதியில எங்கட ஆக்களின்ர உலுப்பலில உலகமே புளியம்பழம் மாதிரி விழப்போகுது பாருங்கோ’

### அர்த்தமுள்ள நீதிப்பொறிமுறைக்காக இலங்கையை உந்தித் தள்ளுங்கள்!

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இணை அனுசரணை நாடுகளிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 17
நாம் உயிருடன் இருக்கும்போது எமக்கான நீதி கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். இலங்கை ஒரு நம்பத்தகுந்த சர்வதேச நீதிப் பொறிமுறைக்கு முகங்கொடுக்கக்கூடிய தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றவேண்டும் - இவ்வாறு வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்

15

### அமைதிவழிப் போராட்டத்தை திசைதிருப்புவதற்குத் திட்டம்

உப்பளப் பணியாளர்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மே 17
ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பை, பொதியிடலுக்காக வேறு இடங்

15

காணி சுவீகரிப்பை கைவிடாவிடில்

### உலகையே உலுக்கும் போராட்டம் வெடிக்கும்!

சுமந்திரன் அரசுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 17
வடக்கின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள காணிகளை சுவீகரித்து அரசுடமையாக்கும் வர்த்தமானி அறிவித்தலை, எதிர்வரும் 28ஆம் திகதிக்கு

15

### வாக்கு வேட்டைக்காகவே பிரம்டனில் நினைவாலயமாம்

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கண்டுபிடிப்பு



கொழும்பு, மே 17
வாக்கு வேட்டைக்காகவே கனடாவின் பிரம்டன் நகர மேயரால் இனவழிப்பு நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல்

15

**கொவிசெத**

| திகதி | 16.05.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 4073 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 15 39 40 61 |
| விசேட எழுத்து | Z |

**ஹந்தஹுண ராசி சுப பலன்**

| திகதி | 16.05.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1140 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 20 40 58 |

**NLB ஜய**

| திகதி | 16.05.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 0099 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 2 5 |

**மெகா பவர்**

| திகதி | 16.05.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 2179 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 10 50 62 68 |

**மஹஜன சம்பத**

| திகதி | 16.05.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 5831 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 8 2 4 8 3 7 |

**தன நிதானய**

| திகதி | 16.05.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1861 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 01 21 37 67 |
| விசேட எழுத்து | L |

**அத சம்பத**

| திகதி | 16.05.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 0406 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 4 8 3 7 |

# பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பில் அதிக அவதானம்

*பிரதமர் ஹரிணி தெரிவிப்பு*

**கொழும்பு, மே 17**

**தொழில்களில் ஈடுபடும் பெண்களின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். தொழில் செய்யும் இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் உருவாக்கப்படவேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்று நடைபெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எந்தவொருவேலையிலும்தொழிற் பாதுகாப்புத் தொடர்பாகப் பேசும் போது, அது வெறும் சம்பளத்தைப் பற்றியது மட்டுமல்ல. பெண்கள் பணிபுரியும் பாதுகாப்பான சூழல் மற்றும் தொழிற்சூழலின் பாதுகாப்பு குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். பல்வேறு காரணங்களால் தொழிற்சூழல் பாதுகாப்பற்றதாக மாறும் நேரங்கள் உள்ளன. பெண்கள் பெரும்பாலும் இரவு நேர வேலைகளில் ஈடுபடவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். தொலைதூர இடங்களில், போக்குவரத்துக் குறைவாக உள்ள இடங்களிலும், தங்களைவிட சக்திவாய்ந்தவர்களால் அழுத்தங்களுக்கு உள்ளாகும் இடங்களிலும் வேலைசெய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதுபோன்ற சூழ்நிலைகளில் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது மிகவும் முக்கியம் என்று நான் நினைக்கிறேன் - என்றார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 16.02.2025 | வெள்ளிக்கிழமை | 0539 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| T | 5 6 1 2 1 6 |

**Super Ball DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 16.02.2025 | வெள்ளிக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2805 | V | 20 32 38 61 |

**சனிதா DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 16.02.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| G | 03 19 26 33 | 4966 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் |
|---|---|
| 16.02.2025 | வெள்ளிக்கிழமை |

| மேடம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 13 18 26 50 | 4517 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 16.02.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| H | 03 | 07 23 45 46 | 1981 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 16.02.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| L | 03 12 25 37 | 2631 |

# ஆளும்கட்சிக்கு ஆதரவில்லை!

*தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு*

கொழும்பு, மே 17

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இல்லாத சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஆளும் தரப்புக்கு ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை. எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு நிபந்தனையுடன் ஆதரவளிக்கத் தயார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அதிகமான சபைகளில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. யார் ஆட்சியமைப்பதற்கும் ஏனைய கட்சிகளின் ஆதரவு தேவைப்படுகிறது.

ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்க நாம் தயாரில்லை. அரசாங்கம் பேசுகின்றதே தவிர செயற்பாட்டில் எதையும் காணமுடியவில்லை.

அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது புதுமையாக இருக்கிறது. 60 ரூபாவுக்கு விற்கப்பட்ட உப்பு 350 ரூபாவாக விலை அதிகரித்தமைக்கு 70 வருட சாபம் எனத் தெரிவிக்கிறார்கள். ஆசிரியர் நியமனம் கிடைத்த ஒருவருக்கு பாடசாலை ஒன்றின் அதிபர் பதவியை வழங்கியதுபோன்றே இப்போது நிலைமை இருக்கிறது - என்றார். (எ-இ)



# பரீட்சைகள் ஆணையாளராக பதவியேற்றார் இந்திகா

கொழும்பு, மே 17

இலங்கையின் 11ஆவது பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நாட்டின் முதல் பெண் பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே, பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்படுவதற்கு முன்பு, தேர்வுத் துறையின் இரகசியப் பள்ளித் தேர்வுக் கிளைக்குப் பொறுப்பான பரீட்சை ஆணையாளராகவும், நிர்வாகம் மற்றும் புலனாய்வுக் கிளைக்குப் பொறுப்பான பரீட்சை ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார். (எ-இ)

# 6.7 கிலோ தங்கம் கடத்தியோர் விமானநிலையத்தில் கைது!

கொழும்பு, மே 17



சுமார் 210 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தைக் கடத்த முயன்ற இரு வர்த்தகர்கள் கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமானநிலையத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வாகன உதிரிப்பாகங்களுக்குள் தங்கக் கட்டிகளைச் சூட்சுமமாக மறைத்து வைத்து, விமானநிலையத்தின் வர்த்தகர்களுக்கான விசேட வழியூடாக வெளியேற முயன்ற போது கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு, கிராண்ட்பாஸைச்சேர்ந்த 26 வயதுடைய ஒருவரும், கண்டி, ரம்புக்வெல்லவைச்சேர்ந்த 46 வயதுடைய ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். சுங்க அதிகாரிகள் சோதனையின்போது சந்தேகநபர்கள் தங்களின் பயணப்பையில் மறைந்து வைத்திருந்த 6.7 கிலோகிராம் எடையுள்ள தங்கத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இரண்டு வாகன உதிரிப்பாகங்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 21 தங்க பிஸ்கட்டுகளும், வாகன குளிரூட்டும் அமைப்பின் நீர்க்குழாய் பாகங்களுக்குள் பொருந்தும் வகையில் உருக்கி வடிவமைக்கப்பட்ட பல தங்கக்கட்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-இ)

# ஹரக் கட்டாவின் குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு ரி.ஐ.டி. ஆயத்தம்

கொழும்பு, மே 17

முன்னாள் அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் 30 கோடி ரூபா இலஞ்சம் கோரினர் என்று பாதாள உலகக் குழுவின் உறுப்பினரான ஹரக் கட்டா வெளியிட்ட கருத்துத் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை பயங்கரவாத விசாரணைப் பிரிவு முன்னெடுக்கவுள்ளது என்று கூறப்படுகின்றது. ஹரக் கட்டா கொழும்பு மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, அழைத்துச்செல்லப்பட்டபோது நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களிடம் இந்தத் தகவலைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஹரக் கட்டா தமக்கு 70 கோடி ரூபா இலஞ்சம் வழங்கமுயற்சித்தார் என முன்னாள் அமைச்சர் டிரான் அலஸ், 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி கூறியிருந்தார். (எ-இ)

# கதிர்வீச்சைக் கண்டறியும் கருவியை கடற்படைக்கு வழங்கிய அமெரிக்கா



**கொழும்பு, மே 17**

**கதிர்வீச்சு மற்றும் இரசாயனங்களைக் கண்டறியும் அதிநவீன கருவி ஒன்றை இலங்கைக் கடற்படைக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் வழங்கியுள்ளது. இதன் பெறுமதி 299 மில்லியன் ரூபா (ஒரு மில்லியன் டொலர்) என்று தெரிவிக்கப்படுகின்றது.**

கடல்சார் களத்தில் அணு, கதிரியக்க மற்றும் இரசாயன அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து அதற்கான பதிலளிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திறனை இந்தக் கருவி அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க சக்தித் திணைக்களத்தின் தேசிய அணுச்சக்தி பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் அதன் அணுக்கடத்தல் கண்டறிதல் மற்றும் தடுப்பு அலுவலகத்தால்வழங்கப்பட்ட இந்தக் கருவி, இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலீ சங் மற்றும் இலங்கைக் கடற்படையின் கட்டளைத்தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். (எ-இ)

## கப் ரக வாகனம் கவிழ்ந்து விபத்து

கண்டி, மே 17

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் ஆனைக்கொய்யாப்பழங்களை ஏற்றிச்சென்ற கப் ரக வாகனம் ஒன்று பாதையைவிட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று அதிகாலை 4 மணியளவில் ஹட்டன் ஸ்த்ராடன் தோட்டப்பகுதியில் நிகழ்ந்துள்ளது.

வாகனத்தில் நான்கு பேர் பயணித்ததாகவும் விபத்தில் வாகன சாரதியும் பயணி ஒருவரும் காயமடைந்த நிலையில் வட்டவளைப் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-33)

## வெளிநாட்டுத் தூதுவர்கள் அறுவருக்கு நியமனக்கடிதம்

கொழும்பு, மே 17

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆறு பேருக்கான நியமனக்கடிதங்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டுள்ளன.

நியமிக்கப்பட்ட ஆறு பேரும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களாவர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்றபின் அரச உயர்பதவிகளிலும் இராஜதந்திர சேவையிலும் பெரும்பான்மையினத்தோரையே நியமித்து வருகின்றமையைக் காணமுடிகிறது என்று தெரிவிக்கப்பட்டுகின்றது. (ச-25, 6)



## நீதியமைச்சுக்கு சொந்தமான வாகனங்களை விற்க முடிவு

கொழும்பு, மே 17

அமைச்சுக்குச் சொந்தமான பத்து சொகுசு வாகனங்களை விற்பனைசெய்வதற்கு நீதியமைச்சு தீர்மானித்துள்ளது.

கூடுதல் எரிபொருள் விரயம், பராமரிப்புச் செலவு அதிகம் போன்ற காரணங்களாலேயே இந்த சொகுசு வாகனங்களை விற்பனைசெய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை விற்பனைசெய்வதன்மூலம் அரச செலவினத்தை மீதப்படுத்தலாம் என நீதியமைச்சு தெரிவித்துள்ளது. (ச-25, 6)

## பீடி இலைகள், சிகரெட்டுகள் கடற்படையால் பறிமுதல்

யாழ்ப்பாணம், மே 17

இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின்மூலம் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் மற்றும் வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

2025 மே மாதம் 2 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையில் கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட விசேட கூட்டுத்தேடுதல் நடவடிக்கையின்போது, ஊருமலை மற்றும் கச்சதீவு ஆகிய கடலோரப்பகுதிகளில் கரைக்குக் கொண்டுவரமுடியாமல் கைவிடப்பட்டதாகச் சந்தேகப்படும் கரையொதுங்கிய 310 கிலோ 44 கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டன.

அதேவேளை கண்டி முருத்தலாவ மற்றும் லேவெல்லப் பகுதிகளில் சட்டவிரோத விற்பனைக்காகத் தயார்நிலையில் இருந்த சுமார் 12,200 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைதாகியுள்ளனர்.

சந்தேகநபர்களையும் சான்றுப்பொருள்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அந்தந்தப் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கவுள்ளனர். (ச-25,125)








**தேர்தலில வெல்லுறதைவிட அந்த வெற்றியைத் தக்கவைக்கிறதுதான் முக்கியம். இப்ப வீட்டுக்கட்சிக்காரரும் அப்பிடிப்பட்டதொரு இக்கட்டான நிலையிலதான் நிக்கினமாம். அப்படி இக்கட்டு வாறதுக்கு வேற கட்சிக்காரர் காரணம் எண்டு நினைச்சீங்கள் எண்டால், அதைவிட மொக்குத்தனம் வேறயொண்டுமில்லை. அந்தக் கட்சிக்காரர்தான் தங்கட கட்சியின்ர வெற்றியை செல்லாக்காசாக்கிற வேலையில இறங்கியிருக்கினம்.**

**திருகோணமலையில இப்பிடிக் கட்சியை நாசமாக்கிற வேலைக்குப்போனவைக்கு அங்கத்தைக் கட்சிக்காரரும், சனங்களும் முறையான பதிலடி குடுத்து அனுப்பியிருக்கினம். திருகோணமலை மாநகரசபையிலையும், (முந்தி நகரசபையா இருந்து இப்ப மாநகரசபையா மாறிட்டுது) திருகோணமலை நகரமும் சூழலும் சபையிலையும் வீட்டுக்கட்சிக்குத்தான் ஆட்சியமைக்கிற பெரும்பான்மை இருக்குது. ஆனால் நாலைஞ்சு நாளைக்கு முதல் கட்சியின்ர பதில் செயலாளர் அங்க போயிருக்கிறார். போனவர் சும்மா இருக்க முடியாமல், தானொரு ஆளின்ர பேரைச் சொல்லி 'அவர்தான் தவிசாளர். இவர்தான் மேயர்' எண்டு சொல்லியிருக்கிறார். அதைக்கேட்டதும் சனத்துக்குக் கடும்கோபம்.**

**எலக்சனில ஆர் தவிசாளர், ஆர் மேயர் எண்டு சொல்லாமல் வாக்குக் கேக்கிறதெண்டும், பிறகு வெல்லுற உறுப்பினர்கள் ஜனநாயக ரீதியா ஒராளைத் தங்கட தவிசாளரா ( மாநகரசபையில மேயர்) தெரிவுசெய்யிறதெண்டும் தான் கட்சி மேலிடம் சொல்லியிருந்தது. இப்ப வெண்ட பிறகு போய், இப்பிடி தாங்கள் நினைச்ச ஆளைத் தவிசாளராவும், தலைவராவும் போட்டால் சனத்துக்கும், கட்சிக்காரருக்கும் கோபம் வரத்தானே செய்யும். அதோட இப்ப கட்சி மேலிடம் தவிசாளராக் கைகாட்டுற ஆள்.இவ்வளவு நாளும் நாலைஞ்சு சிங்களக் கட்சியளில சவாரி விட்டிட்டு இப்பதான் வீட்டுக்கட்சிக்கு வந்தவர். ஆனால் பதில் செயலாளரோட கடும் ஒட்டுறவு. அதாலதான் அவரைத் தவிசாளராக்கவேணுமெண்டு பதில் செயலாளர் ஒற்றைக்காலில நிண்டவராம். 'ஆரெண்டாலும் தவிசாளரா வரட்டும், ஆனால் தங்கட தவிசாளர் ஆரெண்டு மெம்பர்மார்தான் தீர்மானிக்கோணும். அப்பிடி இல்லாமல் இவை தாங்கள் நினைச்ச ஆளைத்தான் போடுவினம் எண்டால், தவிசாளர் தெரிவு நடேக்கேக்க நாங்கள் ஒருத்தரும் சபைக்கு போகமாட்டம்' எண்டு அந்தப் பிரதேசசபைக்குத் தெரிவான பெரும்பாலான வீட்டுக்கட்சி உறுப்பினர்மார் உறுதியா இருக்கினமாம்.**

**குச்சவெளியிலையும், மூதூரிலையும் அரும்பொட்டில இருக்கிற ஆட்சியமைக்கிற வாய்ப்பை, எப்பிடிப் பாவிக்கலாம் எண்டு உந்தக் கட்சி மேலிடம் பாக்கிறதை விட்டிட்டு, ஈஸியா ஆட்சியமைக்கவேண்டிய சபையளையும் சிக்கலாக்குகினம் எண்டும் திருகோணமலைச் சனங்கள் புறுபுறுக்கினம் கண்டியளோ.**

padsi@uthayan.com -பட்சி



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழி உறவுகள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. பிற்பகலுக்குமேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வெளியிலிருந்து உணவு வரவழைத்து சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கடகம்:** பிள்ளைகள்வகையில் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். இளைய சகோதரர்களால் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தெய்வப் பணி களில் ஈடுபடும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும். நண்பர்களுக்காக செலவுசெய்யநேரிடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சிதரும்.

**கன்னி:** பணவரவு திருப்திதரும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க் கைத்துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும். இளைய சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி, அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். அவரிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும்.

**தனுசு:** பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேறுபாடு நீங்கும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவை.

**மகரம்:** பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். அவர்களுடன் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமையுடன் இருப்பது அவசியம்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்களுக்காக செலவுசெய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண்விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**மீனம்:** சிலருக்கு சகோதரர்கள் மூலம் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.

# நல்லூரடியில் அசைவ உணவகம் தடைவிதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 17

யாழ். நல்லூர் ஆலயத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்துக்குத் தடைவிதிக்குமாறு கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் 4 ஆம் வட்டார உறுப்பினர் சந்திரசேகரம் இராஜகுமார் யாழ். மாநகரசபையின் ஆணையாளருக்கு கடந்த புதன்கிழமை கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். நல்லூர் ஆலயச் சூழலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அசைவ உணவகம், சைவ மக்களின் மனங்களுக்கும், ஆன்மீக உளவியலுக்கும் மதிப்பளிக்காமையை எடுத்துக்காட்டுகிறது. எனவே அசைவ உணவகத்தின் செயற்பாடுகளுக்கு முற்றாகத் தடைவிதிக்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச- 25,27)



# கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 17

ஆனைக்கோட்டையில் கசிப்புடன் இருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற புலனாய்வுத்தகவலுக்கமைய ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# மாவிட்டபுர கூ.சங்கங்களில் அங்கத்தவர்கள் இணைப்பு

யாழ்ப்பாணம், மே 17

யாழ். மாவிட்டபுரத்தில் அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் தமது கிளை நிலையங்களில் புதிதாக அங்கத்தவர்களை இணைத்துவருகின்றன. இது தொடர்பாக கிளை நிலையங்களில் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 103 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளவேண்டும். கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இந்த மாத இறுதி வரையான காலப்பகுதியில் கூடுதலான அங்கத்தவர்களை இணைத்துக்கொண்ட முதல் 3 சங்கங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் என யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை அறிவித்துள்ளது. (ச-25, 17)

# மின்னிதழ் வெளியீடு

சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகத்தினால் அரையாண்டுக்கான ரோட்டரி மின்னிதழ் அண்மையில் சுன்னாகத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் வெளியிடப்பட்டது.

றோட்டரி முன்னாள் மாவட்ட உதவி ஆளுநர் சுகந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இந்த மின்னிதழை வெளியிட்டு வைத்தார். (ச-41-27)

# ஓவியப்போட்டி

சாவகச்சேரி, மே 17

அரச சிறுவர் ஓவியப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

தமது பிரதேச செயலக கலாசார அலகில் உரிய விண்ணப்பப் படிவத்தினைப்பெற்று நிரப்பி, ஓவியத்தை இணைத்து மே 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பணிப்பாளர் கே. எஸ்.தில்ஹானி அறிவித்துள்ளார். (ச-25,9)



# சித்த மருத்துவ முகாம்

யாழ்.மாவட்ட சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில், மருத்துவ முகாம் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. சமாசத்தின் தலைவர் எஸ்.சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற முகாமில் சித்த மருத்துவர் யோ.மதிகன் மருத்துவசேவைகளை வழங்கினார். (ச- 25, 17)



வரலாற்று சிறப்புமிக்க யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் நந்தவன உற்சவம் கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அம்பாள், விநாயகர், முருகன், வள்ளி தெய்வானை ஆகிய பரிவாரமூர்த்திகளுடன் அம்பாள் வெளிவீதியூடாக நந்தவனபீடத்தில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-25,27)

# வலிசுமந்த வரலாறு நினைவுகூரல் இன்று

யாழ்ப்பாணம், மே 17

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். தெல்லிப்பழைச் சந்தியில் நடைபெறவுள்ளது.

வலி சுமந்த வரலாற்றை எமது வருங்காலச் சந்ததிக்குக் கடத்தும் முகமாக இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-66)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

பணம் ஓர் அத்தியாவசியப் பொருள். ஆனால் மனித உழைப்பிற்கு முன்னால் அது கீழ்த்தரம் உடையது.

– சாமெர்செட் மகம்

# பட்டலந்தவும் பட்டலைவும்!

இனப்படுகொலைகள் நிகழவேயில்லை. கனடாவின் பிரம்டன் நகரில் அமைக்கப்பட்டுள்ள, தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியும் அதன் பின்னாலுள்ள அரசியலும் இலங்கைக்குள் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தக்கூடியவை என்று அறிவித்திருக்கின்றார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத். அத்துடன், இலங்கைக்கான கனேடியத் தூதுவரை அவசரஅவசரமாகச் சந்தித்து, 'இலங்கையில் இனப்படுகொலைகள் நிகழவில்லை. கனடாவால் பயங்கரவாதிகள் என்று அங்கீகரிக்கப்பட்ட புலிகளுக்கு எதிராகவே நாம் போராடினோம்' என்றும் இலங்கை அரசின் குருதி வெறியாட்டத்துக்கு வக்காலத்து வாங்கியிருக்கின்றார் அவர்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் சொல்வதொன்றும் செய்வதொன்றுமாகவே நகர்ந்து செல்கின்றது என்பதற்கும், அது பித்தலாட்டங்களால் நிரம்பி வழிகின்றது என்பதற்குமான, ஆகப் பிந்தியதும், ஆகப் பெரியதுமான எடுத்துக்காட்டே பிரம்டனில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் கருத்துகள். உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற இலங்கை போன்ற நாட்டில், நல்லிணக்கம் ஏற்படவேண்டுமென்றால், கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட குற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், தவறுக்கு வருந்துவதும், மன்னிப்புக்கோருவதும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதும் இந்தச் செயன்முறையின் அடுத்தடுத்த பிரதான படிநிலைகளாகக் காணப்படுகின்றன.

இந்தப் படிநிலைகளுக்கான முதலாவது அடியை, 'பட்டலந்த வதைமுகாம்' தொடர்பான, ஏப்ரல் மாத நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் எடுத்துவைத்திருந்தது. அதாவது, 'கடந்தகாலத் தவறுகளை ஏற்று அதற்காக மன்னிப்புக்கோரி குற்றமிழைத்தவர்களைத் தண்டித்து, தொடர்ந்து முன்னேறுவோம்' என்று சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல், அந்தக் கூட்டத்தொடரில் தெரிவித்திருந்தார். பிரதமர் ஹரிணியும், அமைச்சர் பிமலின் கருத்தைப் பிரதியெடுத்ததுடன், மீண்டும் நிகழாமை உறுதிப்படுத்தப்படும் என்றும் வாக்குறுதி வழங்கியிருந்தார். ஆனால், இன்று நிகழ்வது என்ன? பட்டலந்த வதைமுகாம் தொடர்பான கூட்டத்தொடரில் அரசாங்கம் தெரிவித்திருந்த கருத்துகளுக்கும், இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் தற்போதைய அறிக்கைக்கும் கிஞ்சித்தேனும் தொடர்பிருக்கின்றதா?

இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற பட்டலந்த வதைமுகாம் தொடர்பான விசாரணைகளில் அரசாங்கம் கொண்டுள்ள ஆர்வம் பாராட்டப்படவேண்டியது. இதைத் தமிழர்கள் பலமுறை பதிவு செய்துள்ளனர். ஆனால், அந்த ஆர்வத்திலும், அக்கறையிலும் பத்தில் ஒரு பங்கேனும் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு நீதி வழங்குவதில் அரசாங்கம் கொண்டிருக்கின்றதா? என்ற கேள்வி இங்கெழுவது தவிர்க்கப்படமுடியாதது.

இலங்கையில் உள்ள இனப்பிரச்சினை, தென்னாபிரிக் காவைப் பின்பற்றி அமைக்கப்படும் பொறிமுறைகளால் தீர்க்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் பலமுறை கூறியிருந்தார். 'உண்மைக்கும் நல்லிணக் கத்துக்குமான ஆணைக்குழுவை' அமைத்ததால் தென்னாபிரிக்கா இனத்துவேசங்களையும் நிறத்துவேசங்களையும் களையவில்லை. எல்லாவற்றுக்கும் முதல் அது குற்றங்களை ஏற்று, பாதிக்கப்பட்டவர்களின் காயங்களை ஆற்றுப்படுத்தியது. இலங்கை இவ்வளவு காலமும் செய்ய மறுக்கும் கருமமும் இதுவே. 'நாடு அநுரவோடு' இருக்கலாம், ஆனால், 'அநுர நம்மோடு இல்லை' என்பதுதான் இதில் பீறிட்டு வெளிப்படும் உண்மை. இந்த நிலை தொடர்ந்தால் இறுதியில் 'தமிழர்கள் அநுரவோடு இல்லை' என்பது முழு உலகுக்கும் வெளிப்படவும் செய்யும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## வெளிநோயாளர்களைக் கையாள 1000 வெளிநோயாளர் பிரிவுகள்



### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 17**

**தற்போதுள்ள மருத்துவமனை முறைமையில் வெளிநோயாளர் பிரிவு, வெளிநோயாளிகளின் எண்ணிக்கையைக் கையாள்வதற்குச் சிரமப்படுகின்றது. மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மருத்துவமனை நிலைகளைத்தாண்டி, ஆயிரம் ஆரம்ப வெளிநோயாளர் பிரிவுகளை உருவாக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துவருகிறோம். இவ்வாறு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்று நடைபெற்ற சர்வதேச தாதியர்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உலகில் வேகமாக வளர்ந்துவரும் முதியோர் சனத்தொகையைக் கொண்ட நாடாக இலங்கை உள்ளது. மக்களை மருத்துவமனைக்கு அழைத்துவருவதற்குப் பதிலாக, அவர்களை அங்கேயே பராமரித்து அவர்களின் உடல்நிலையைக் கண்காணிக்கத் தேவையான வசதிகள் தயார்செய்யப்பட்டு வருகின்றன. எங்கள் அடுத்த இலக்கு தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்துவதாகும். இந்த ஆண்டு 3 ஆயிரத்து 147 தாதியர் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

தற்போதுள்ள தாதியர்களின் எண்ணிக்கையை 40 ஆயிரத்திலிருந்து, 60 ஆயிரமாக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மூன்று மாதங்களுக்குள் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பை முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு மற்றும் உயர்கல்வி அமைச்சுடன் இணைந்து, தாதியர் பட்டங்களை முறையாக வழங்க நாங்கள் தற்போது திட்டமிட்டுள்ளோம் - என்றார். (எ-இ)

## உடைமையில் ஹெரோய்ன்; மூவருக்கு தூக்குத்தண்டனை

கொழும்பு, மே 17

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைசெய்தமை ஆகிய குற்றச் சாட்டுகளுடன் தொடர்புடைய மூவருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இந்த மூவரும் 2018 ஆம் ஆண்டு பேருவளையைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் பல நாள் மீன்பிடிக் கப்பலில் 17 கிலோகிராமுக்கு அதிகளவான ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பயணித்துக்கொண்டிருந்த போது கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மேலும் 5 பிரதிவாதிகளை விடுதலைசெய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே உத்தரவிட்டுள்ளார். (எ-இ)

## ஹர்ஷான் டி சில்வா பிணையில் விடுவிப்பு

நில மறுசீரமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹர்ஷான் டி சில்வா அரச நிதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின்கீழ் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஹர்ஷான் டி சில்வா அங்கீகரிக்கப்படாத நிகழ்வு ஒன்றுக்கு 27.6 மில்லியன் ரூபாவை வீண்விரயம் செய்த குற்றச்சாட்டின்கீழ் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ச-33-6)

## இறக்குமதியானது ரோல்ஸ் ரோய்ஸ்

கொழும்பு, மே 17

அநுர அரசாங்கம் வாகன இறக்குமதித் தடையை நீக்கியதையடுத்து ரோல்ஸ் ரோய்ஸ் கார் ஒன்று இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது. விசேட சரக்கு விமானம் மூலம் இந்தக் கார் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. இந்தக் காரின் பெறுமதி 500 மில்லியன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,6)

## குழந்தைகள் இடையே அதிகரிக்கும் தொற்று

கொழும்பு, மே 17

குழந்தைகளிடையே இன்ப்ளூவென்ஸா, டெங்குக் காய்ச்சல் மற்றும் சிக்கன்குனியா ஆகிய தொற்றுக்கள் அதிகரித்து வருகின்றன என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பண்டிகைக் காலத்தில் குழந்தைகள் அதிகமாக வெளியிடங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டமையே இதற்குக் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்த வைரஸ் நோய்களில், இன்ப்ளூவென்ஸாத் தொற்று அதிகளவில் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை

ஞாயிற்றுக்கிழமை- வைகாசி 04

18.05.2025

சுபநேரம் : 08.53- 10.23

ராகுகாலம் : 04.23 - 05.53

# மீள்குடியமர்த்த அரசாங்கம் தாமதித்தால் தாமாகவே குடியமர்வர் ஏ.சி.பாம் மக்கள்!

ரவிகரன் எம்.பி. எச்சரிக்கை

**முல்லைத்தீவு, மே 17**

**ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏ.சி.பாம் கிராம மக்களை மீள்குடியமர்த்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பகுதியில் மக்களோடு இறங்கி துப்புரவு நடவடிக்கைகள் மேற்கொண்டு மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித் துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்படாத ஏ.சி.பாம், தண்ணிமுறிப்பு ஆகிய இடங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நேற்றுமுன்தினம் களப்பயணம் மேற்கொண்டார். அந்தப் பகுதி மக்களுடனும் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஏ.சி.பாம் கிராமத்தை நிலஅளவைத் திணைக்களம் அளவீடு செய்த 1979ஆம் ஆண்டு வரை படம் உள்ளது. ஆனால் அந்தப் பகுதி தண்டுவான் ஒதுக்கக்காடு என 2012ஆம் ஆண்டு வர்த்தமானி வெளியிடப்பட்டிருப்பது சட்ட மீறல் செயற்பாடு.

அந்தப் பகுதியில் வாழ்ந்த 46 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் அசாதாரணமான சூழ்நிலை காரணமாக 1997ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். இதுவரை அவர்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை. அந்தக் கிராமத்தில் மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் உள்ளன.

இந்நிலையில் 2012ஆம் ஆண்டு ஏ.சி.பாம் கிராமம், தட்டுவான் ஒதுக்கக்காட்டுப் பகுதியாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டு, வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டு நிலஅளவைத் திணைக்களத்தால், இந்தப் பகுதி அளவீடு செய்யப்பட்டு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வரைபடம் எம்மிடமுள்ளது. தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்கள் இவ்வாறுதான் அபகரிப்புச் செய்யப்படுகின்றன. மக்களுடைய காணிகள் மக்களிடமே சேரவேண்டும். வனவளத்திணைக்களமோ அல்லது ஏனைய அரச திணைக்களங்களோ மக்களின் காணிகளை அபகரிக்கும் சட்டமீறல் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. இதேபோன்று தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய இடங்களிலும் மக்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை. இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டுவதற்கும், ஜனாதிபதி, பிரதமர், உரிய அமைச்சுகளின் கவனத்துக்குக் கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், வீமன்கமம் பகுதியில் வனவளத்திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 10 பேருக்குரிய, 20 ஏக்கர் விவசாயக் காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும்-என்றார். (எ-26.246)



## சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 17

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் கண் சுகாதாரம் பற்றிய கருத்தரங்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் மு.மலரவன் வளவாளராகக் கலந்துகொண்டு சிறப்புக் கருத்துரையையும், ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் சிறப்புக் கருத்துரையாளருக்கான அறிமுக உரையையும், ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி அன்னையர் தினச் சிறப்புரையையும் நிகழ்த்தினர். நிகழ்வில் கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் மருத்துவர் மு.மலரவன் கௌரவிக்கப்பட்டார். (ச-41-66)



## முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் நிகழ்வு வல்வெட்டித்துறையில் தமிழ்த்தேசியப் பேரவையினரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பேருந்து நிலையத்தில் வைத்து இறுதிப்போரில் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சியும் காய்ச்சிப் பரிமாறப்பட்டது.

நினைவேந்தலில் தமிழ்த்தேசியப் பேரவையைச் சேர்ந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் செ.கஜேந்திரன், சட்ட ஆலோசகர் நடராஜா காண்டீபன் உள்ளிட்ட தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-100)



## வடமராட்சி கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவு

யாழ்ப்பாணம், மே 17

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக வடமராட்சி கிழக்கு தன்னார்வ இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் அஞ்சலி நிகழ்வும் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சியும் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

"உடல் சிதைந்து உயிர் மடிந்த குருதியில் நனைந்து போனநிலம் மறந்து போகுமா? முள்ளிவாய்க்கால்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் வடமராட்சி கிழக்கு இளைஞர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

## வவுனியாவைச் சென்றடைந்தது முள்ளிவாய்க்கால் நினைவூர்தி

வவுனியா, மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் தமிழினப் படுகொலையில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் ஊர்திப்பவனி நேற்றுக் காலை வவுனியாவைச் சென்றடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் தியாகதீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக ஆரம்பமான ஊர்திப்பவனி நேற்று வவுனியா நகரை சென்றடைந்தது.

வவுனியாவில் நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. குறித்த ஊர்திப்பவனியை உணர்வெழுச்சியுடன் வரவேற்று வவுனியா மக்கள் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர். (ச-33-110)





# மழையுடன் கூடிய காலநிலையால் உப்பு உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி

## லங்கா உப்பு நிறுவனத் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 17**

**நாட்டில் நிலவிய மழையுடன் கூடிய தொடர்ச்சியான வானிலை காரணமாக இந்த ஆண்டு ஒரு கன சதுர உப்பைக்கூட உற்பத்திசெய்ய முடியவில்லை என்று லங்கா உப்பு நிறுவனத்தின் தலைவர் டி. நந்தன திலக தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தப் பாதகமான வானிலை ஹம்பாந்தோட்டையை மட்டுமல்ல, அலிமங்கட உட்பட அனைத்து உப்பு உற்பத்தி இடங்களையும் பாதித்துள்ளது. கடந்த ஆண்டு இந்த நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. லங்கா உப்பு நிறுவனம் கடந்த ஆண்டு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பு இருப்பை உற்பத்திசெய்யும் என்று மதிப்பிட்டிருந்தாலும், பாதகமான வானிலை காரணமாக 40 ஆயிரம் மெட்ரிக் தொன் மட்டுமே உற்பத்திசெய்ய முடிந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் உப்பு உற்பத்தி தொடங்குவது வழக்கமாக இருந்தாலும், பாதகமான வானிலை அதற்குத் தடையாக உள்ளது. சந்தையில் உப்புத் துகள்களுக்குப் பற்றாக்குறை இருந்தாலும், தூள் உப்புக்குப் பற்றாக்குறை இல்லை. லங்கா உப்புநிறுவனம் கடந்த புதன்கிழமை லங்கா சதோசாவுக்கு 400 கிராம் தூள் உப்புக்கொண்ட ஒரு இலட்சம் பொதிகளை வழங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் மேலும் ஒரு இலட்சம் பொதிகள் வழங்கப்பட்டன - என்றார். (எ-இ)



முள்ளிவாய்க்கால் நினைவுவாரத்தை முன்னிட்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் நாவற்குழிப் புகையிரதநிலையத்துக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்டது. (ச-25, 28)



தமிழரசுக்கட்சியின் வவுனியாக் கிளையினரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு குருமன்காட்டில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வுகளில், பொதுமக்கள் பலர் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டு கஞ்சி அருந்தினர். (ச-25,110)







## தெய்வீக இசையும் உதவி வழங்கலும்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாகத் தெய்வீக இசையும் பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கலும் நேற்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றன. ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில ஜெயக்குமார் டிலோஜினி, யோகராசா றொபின்சிகா குழுவினரின் தெய்வீக இசை நிகழ்வைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-41-66)



## முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வவுனியாவில் வழங்கல்

வவுனியா, மே 17

முள்ளிவாய்க்கால் அவலங்களை வெளிப்படுத்தும் கஞ்சி வழங்கும் நிகழ்வு வவுனியாவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகத்தினால், வவுனியா மொத்த மரக்கறி விற்பனை நிலையத்துக்கு முன்பாக இந்த நிகழ்வுஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ச-25,110)

## நினைவுக்கஞ்சி வழங்கல்

முல்லைத்தீவு, மே 17

கடந்த 2009ஆம் ஆண்டு கொத்துக்கொத்தாக செத்துமடிந்த எமது உறவுகளை நினைவுகூரும் முகமாக ஆறாவது நாளாக விசுவமடு சுண்டைகுளம் சந்திப்பகுதியில் வர்த்தகர்கள், இளைஞர்கள் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சியை வழங்கினர்.

இதன்போது இறந்த எம் உறவுகளுக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலிசெலுத்தப்பட்டது. (ச-41-113)

தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி நேற்று வெள்ளிக்கிழமை பரிமாறப்பட்டது.யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பகுதி, கோப்பாய் , வேலணை உள்ளிட்ட இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.(25,20)



# மாணவி அம்ஷிகா விவகாரம் தனி விசாரணைக்குழு நியமனம்

கொட்டாஞ்சேனை மாணவி அம்ஷிகா மரணம் தொடர்பாக தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரசபை தனி விசாரணையைத் தொடங்கியுள்ளது.

இதற்காக பத்துப் பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் திருமதி பிரீத்தி இனோகா ரணசிங்க தெரிவித்துள்ளார். அதே வேளை கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுமி ஒருவர், பாடசாலை ஆசிரியரால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளானதால், மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார். அதன்பின்னர் தனியார் வகுப்பிலும் அந்த மாணவிக்கு மனஉளைச்சல் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால், அந்த மாணவி உயரமான கட்டடத்திலிருந்து குதித்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-இ)

## ஆதனங்களை மதிப்பீடு செய்தல் சம்பந்தமான அறிவித்தல்

**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தினால் எமது பிரதேச சபைக்குட்பட்ட சகல ஆதனங்களின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் முதற்கட்டமாக சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட ஆதனங்களின் மீள் மதிப்பீடானது 2025.05.21 ம் திகதி புதன் கிழமை ஆரம்பிக்கப்பட சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனை தொடர்ந்து அராலி உப அலுவலகம், வட்டுக்கோட்டை உப அலுவலகம் மற்றும் சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட சகல ஆதனங்களும் மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

எனவே விலைமதிப்பீட்டு திணைக்களமும் எமது பிரதேச சபையும் இணைந்து மேற்கொள்ளும் குறித்த ஆதன மீள்மதிப்பீட்டிற்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு எமது பிரதேச சபைக்குட்பட்ட வீட்டுடமையாளர்கள் , வியாபார நிறுவனங்களின் உடமையாளர்கள், பாடசாலைகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அனைத்து ஆதன உடமையாளர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சண்முகராஜா பாலருபன்.
செயலாளர்.
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 05 . 1944 — மறைவு 16 . 05 . 2025

## திருமதி பாலசுப்பிரமணியம் உமாதேவி

துர்க்காபுரம், மல்லாகத்தைப் பிறப்பிமாகவும், ஆனைக்கோட்டை வீதி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் உமாதேவி அவர்கள் நேற்றையதினம் (16.05.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாயகம் - அன்னபூரணியம்மா அவர்களின் இளையபுதல்வியும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - பாலசுப்பிரமணியம் (வீசம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குகதாஸ், மற்றும் நவமணிதேவி (கனடா), மாவிந்திரிதேவி (கனடா), பற்குணதாஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கணேசதாஸ், சிவதாஸ் (லண்டன்), அருள்தாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கனகசூரியம், சிவனேசன், மற்றும் சுந்தரவல்லி, ஜெயமணி, வருணராணி, கமலாதேவி, சிவபாதசுந்தரம், காலஞ்சென்றவர்களான மகேந்திரராஜா, மகாலட்சுமி மற்றும் மங்கையற்கரசி, காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, யோகநாதன் மற்றும் சிவநாதன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

சுதர்சன் (பொறியியலாளர், லண்டன்), சஞ்சயன் (பொறியியலாளர், கனடா), சுதர்ஷினி (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை), சஞ்சிகா (மருந்தியியலாளர் வீசம் மருந்தகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஶ்ரீதாட்சாயினி, சர்மினி, சோமேஸ்வரன் (ஆசிரியர், முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), தனஞ்செயன் (ஆசிரியர், நயினாதீவு ஶ்ரீகனேசா கனிஷ்ட மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

பிரவீனா (வைத்தியர்), சயமி (சட்டத்தரணி), ஹரிஸ், பிரவீன், ராகவி, நிலா, தரிஷ், கபிஷன், பார்கவி, (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி ,
கொக்குவில் மேற்கு

தகவல்:
குடும்பத்தினர்.
077 394 2701

(CS 3185) D"

# மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 09 . 1934 — மறைவு 16 . 05 . 2025

## திருமதி பெர்னான்டோ பாக்கியம்

**(சரசக்கா)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெர்னான்டோ பாக்கியம் (சரசக்கா) அவர்கள் 16.05.2025 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அன்ரனி பெர்னான்டோ அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மரியராணி மற்றும் இமல்டா (ஜெர்மனி), ஓலின்டினா (ஆயுள்வேத வைத்தியர்), கசில்டா (நீர்ப்பாசனத் திணைக்கள ஓய்வூதியர்), ஜெயராணி (லண்டன்), ஜெயராஜ் (டென்மார்க்), கருணாரட்ணம் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். மற்றும் காலஞ்சென்ற ராணி, இராசையா, குருசாமி, மகேஸ்வரி, தவமணி (பிரான்ஸ்) மற்றும் துரைச்சாமி (நுவாலி) ஆகியோரின் சகோதரியுமாவார். காலஞ்சென்ற ரவீந்திரா (ஜெர்மனி), மரிசிலீன், கருணாசீலன், சூரியகுமார் (லண்டன்), தாரணி (டென்மார்க்), ஜரின் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். பெற்றினா, செவான் (ஜெர்மனி), டனி, அனோ, அனிற்ரா, அஞ்சலா (லண்டன்), கபில்ஸ்ரன், நேகா, பியோ, ஒபிக்ரன், இவோனா, கெய்சீன் ஆகியோரின் பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை உடுவில் செபமாலை மாதா ஆலயத்தில் பிற்பகல் 03.00 மணியளவில் நடைபெற்று மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 14 ஆர்க்லேன்,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்

தகவல்:
குடும்பத்தினர்

(CS 38200) E-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 12 . 1952 — மறைவு 14 . 05 . 2025

## வடிவேலு பகவதி

நாவற்குழி கிழக்கு தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வடிவேலு பகவதி கடந்த (14.05.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வடிவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவக்கொழுந்து, நடேசு மற்றும் வேலாயுதம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, இராசதுரை மற்றும் அப்பாத்துரை (சுவிஸ்), பூபதி, தேவராசா, கலாவதி (ஜேர்மனி), தவம் (பிரான்ஸ்), றஞ்சினி, றதி (சுவிஸ்), ரவிச்சந்திரன், சுகி (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மைத்துனியும், நந்தினி (சுவிஸ்), சசிகுமார், தயானி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், வசந்தகுமார் (சுவிஸ்), மனோரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும் வளர்மதி, சஜீபன், கபில்தாஸ், திலோஜன் (சுவிஸ்), கிசோக் (சுவிஸ்), அக்ஷயன் (சுவிஸ்), அபிஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேத்தியும் கிறித்திபனின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாவற்குழி,
தச்சன் தோப்பு.

தகவல் :
குடும்பத்தினர்
077 654 5353

(CS/38258) E-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 02 . 1950



இறப்பு 16 . 05 . 2025

### பொன்னுத்துரை செல்வராசா (கராஜ் துரை)

நீர்வேலி சந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்வராசா நேற்று (16.05.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், திலகவதி அவர்களின் பாசமிகு கணவரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்,
குடும்பத்தினர்.

(CS 3183) D"

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 09 . 1945



மறைவு 16 . 05 . 2025

### நடேசையர் இராமச்சந்திரசர்மா
(ஓய்வு பெற்ற அரச நில அளவையாளர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசையர் இராமச்சந்திரசர்மா அவர்கள் நேற்று (16.05.2025) வெள்ளிக்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசஐயர்- ஜானகியம்மா தம்பதியரின் அன்பு புதல்வரும் சுலோஜனாவின் அன்புக் கணவரும் கவிதா கமலானந்தசர்மா (அவுஸ்ரேலியா), பகீரதசர்மா (ஆசிரியர்-யாழ்/உடுவில் மான்ஸ்.த.க.பாடசாலை), நளினராஜசர்மா (கதிரியக்கவியலாளர், ஆதாரவைத்தியசாலை-தெல்லிப்பளை) ஆகியோரின் தந்தையும் அ.கமலானந்தசர்மா, காயத்திரி ஆகியோரின் மாமனாரும் சர்ணவன், ஓவியா, ஆதீரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2025) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில், காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 217 2542
077 977 3493



### கார் மோதி விபத்து பசு பரிதாபச்சாவு!

யாழ்ப்பாணம், மே 17
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காக்கைதீவு சந்திக்கு அருகாமையில், காரொன்று மோதியதில் பசுமாடு உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த காரே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. இதில், காரின் முன்பகுதி சேதமடைந்துள்ளது. சம்பவ இடத்தில் கூடிய பொதுமக்கள், விபத்துத் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

மாட்டின் உரிமையாளர் அடையாளம் காணப்படாத நிலையில், மாட்டின் காதில் உள்ள இலக்கத் தகட்டை வைத்து உரிமையாளரைத் தொடர்புகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-125)

### வீடுடைத்து பணம் திருட்டு

யாழ்ப்பாணம், மே 17
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் வீடொன்று உடைக்கப்பட்டு, 50 ஆயிரம் ரூபா பணமும் இலத்திரணியல் உபகரணங்களும் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்படு வழங்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி தனலட்சுமி



தோற்றம் 15.10.1953
மறைவு 14.05.2025

தர்மக்கேணி பளையைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டை கண்டாவளை, புன்னைநீராவியை வதிவிடமாகவும் கொண்ட செல்லம், தனம் என்று செல்லமாக அழைக்கப்படும் கந்தசாமி தனலட்சுமி அவர்கள் கடந்த (14.05.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா கார்த்திகேசு (ஆயுள்வேத வைத்தியர்) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (உடையார்) - சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (கவிஞர் குஞ்சரக்கன்று) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சடாச்சரலட்சுமி, காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற தவபாக்கியம் மற்றும் யோகலட்சுமி (கனடா), கணேசமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கமலாதேவி, காலஞ்சென்ற நல்லையா, அன்னம்மா, அமிர்தலிங்கம், காலஞ்சென்ற செவ்வராசா, செல்வராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற குணாளன், கவிதா (நிர்வாக உத்தியோகத்தர் கமநல அபிவிருத்தித் திணைக்களம் கிளிநொச்சி), காலஞ்சென்ற வனிதா (செல்லா - ஆசிரியர்), சுமிதா (இத்தாலி), கஜேந்திரன் (நியூயோர்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராசா, சிவாஸ்கரன், ரவீந்திரன் (இத்தாலி), சிவரூபி (நியூயோர்க்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிசாளினி (தொழினுட்ப உதவியாளர் தேசிய வீடமைப்பு அதிகார சபை), பிரவீனன் (பொறியியலாளர்), பிரணவன் (மருத்துவத்துறை மாணவன்), குகெனியா, கிந்துசன், விதுஷ் (இத்தாலி), விதுர்கா (இத்தாலி), லிதுஷ் (நியூயோர்க்), நிபிஷ் (நியூயோர்க்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆத்விகாவின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை 130/1, முரசுமோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக முரசுமோட்டை ஐயன் கோவிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
மு.செல்வராசா - 077 601 5466
க.கஜேந்திரன்

(CS/58275) J-1



சாவகச்சேரி மட்டுவில் வடக்கு வில்சன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ. த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-25, 9)



பளை மாசார் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், புதுவருட குதூகல விழா, கழக விளையாட்டுமைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. முதன்மை விருந்தினராகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக இளைஞர் சேவை உத்தியோகத்தர் செ.சுஜிதரன் உட்பட கிராம மட்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர். (ச-25,9)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக சமுர்த்தித் அபிவிருத்தி அலுவலர்களுக்கான குறைந்த வருமானம் பெறும் மக்களை வலுவூட்டும் வேலைத்திட்டப் பயிற்சிநெறி உதவிப்பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் வளவாளர்களாக சமுர்த்தி திணைக்கள முகாமையாளர்கள் கலந்துகொண்டனர். (ச-25,9)



வரணி குடமியன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை பாடசாலை அதிபர் கா.நிமலநாதன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-41)



# மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் விசுவமடு வட்டாரத்தில் பிரதேசசபை உறுப்பினராகத் தெரிவான தமிழரசுக் கட்சியின் பிரதேசசபை உறுப்பினர் வே. கரிகாலன், தனது வட்டாரத்தில் பொருளாதாரம் நலிவுற்ற நான்கு மாணவர்கள் பாடசாலைக்கு நீண்டதூரம் நடந்து செல்வதையிட்டு அவர்களுக்கு புலம்பெயர் அமைப்புகள் ஊடாக துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார். (ச-33-19)



குப்பிழான் தெற்கில் கலைவாணி சனசமூக நிலையம், உபதபால் அலுவலகம் ஆகியவற்றின் திறப்புவிழா குப்பிழான் விவசாய சம்மேளனத் தலைவர் செ.நவரத்தினராசாவின் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது. (ச-25,66)



முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கும் நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு அருகில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது. (ச-25,66)



மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில், சுற்றாடல் முன்னோடிப் பாசறை நிகழ்வு கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களப் பயிற்சி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பாகியுள்ளது. ஆரம்ப நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன், கௌரவ விருந்தினர்களாக மத்திய சுற்றாடல் அதிகார சபை பிரதிப்பணிப்பாளர் ம.சிவகுமார், வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் க.அ. சிவனருள்ராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச- 25, 113)

# வீதி விபத்தைக் கட்டுப்படுத்த இரண்டு மாதங்களில் திட்டம்

கொழும்பு, மே 17

வீதி விபத்துகளைத் தடுப்பதற்காக 16 நிறுவனங்கள் கூட்டாகத் தயாரித்துள்ள செயற்றிட்டம் அடுத்த இரு மாதங்களுக்குள் செயற்படுத்தப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்னகுமார குணசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மூன்று மாதங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட 'வீதிப் பாதுகாப்பை' மையப்படுத்திய செயற்றிட்டத் தயாரிப்பு தற்போது நிறைவுக்கு வந்துள்ளது. வீதிப்போக்குவரத்து மற்றும் பாதுகாப்பிலுள்ள அனைத்து முக்கிய பங்குதாரர்களும் இந்தத் திட்டத்தின்கீழ் ஒன்றிணைக்கப்படுகிறார்கள். பயணிகள் போக்குவரத்து ஆணையகம், ரயில்வேத்துறை, பொலிஸார், மோட்டார் போக்குவரத்துத்துறை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் எனப் பலதரப்பட்டவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் - என்றார். (எ-இ)



# கூட்டமைப்பைத் தடைசெய்யாததே பல பிரச்சினைகளுக்குக் காரணம்!

### கண்டுபிடித்தார் சரத் வீரசேகர

**கொழும்பு, மே 17**

**கனடாவில் அமைக்கப்பட்டுள்ள தமிழினப்படுகொலை நினைவுத்தூபி தொடர்பாக இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டும். போர் முடிந்த பின்னர் மஹிந்த ராஜபக்ச, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்திருந்தால் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.**

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் இனங்களுக்கிடையில் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தும். இவற்றைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரவேற்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் அரசியற் செயற்பாடுகளுக்காகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. போர் முடிந்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதது மஹிந்த ராஜபக்ச செய்த அரசியல் ரீதியான தவறாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமது அரசியல் இலாபத்துக்காக அரசியல் அதிகாரப்பகிர்வு தொடர்பாகப் பேசி தேவையில்லாத பிரச்சினைகளை ஏற்படுத்தி, இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரிவினைவாதத்தை மீண்டும் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்கமுடிகிறது. அரசியல் பிரபல்யத்துக்காக தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை அலட்சியப்படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ளவேண்டும்- என்றார். (எ-இ)



# தங்கத்தின் விலை சரிவு

கொழும்பு, மே 17

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகப் பதற்றங்கள் தற்காலிகமாகத் தணிந்துள்ள நிலையில், உலகளவிலும் மற்றும் இலங்கையிலும் தங்கத்தின் விலை கணிசமாகக் குறைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி உலகளாவிய ரீதியில் தங்கத்தின் விலைகள் மூன்று வீதத்துக்கும் அதிகமாகக் குறைந்தன, இது 2025 ஆம் ஆண்டின் மிகப்பெரிய ஒற்றை நாள் சரிவைக் குறிக்கிறது.

கட்டணங்களைக் குறைப்பதற்கான அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான 90 நாள் ஒப்பந்தத்தால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# ஐ.ம.சக்தி ஆதரவாளரின் வீட்டின்மீது தாக்குதல்

கிளிநொச்சி, மே 17

அம்பாள் குளம் கிராமத்திலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர் ஒருவரின் வீட்டின்மீது அண்மையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதியாக நடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலின்போது அந்த வட்டாரத்தில் அவர் வெற்றிபெற்றிருந்தார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக குறித்த வீட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-41-113,214)

# எதிர்க்கட்சிகள் திரள்வது நாட்டுக்கு முன்மாதிரி

### தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, மே 17

அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி நிறுவனங்களில் சபைகளை நிறுவுவதற்கு அனைத்து எதிர்க்கட்சி அரசியற்கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஒன்றிணைய வேண்டும். எதிர்க்கட்சி அதிகாரத்தை நிறுவுவதன் மூலம் நாட்டிற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழமுடியும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து சபைத் தலைவர்களும் உறுப்பினர்களும் தங்கள் பதவிக்காலத்தில் எந்தவொரு மோசடி அல்லது ஊழலிலும் ஈடுபடமாட்டோம் என்று உறுதிமொழி எடுக்கவேண்டும்.

சபைகளின் சபாநாயகர் அல்லது பிரதி சபாநாயகர் பதவியைப் பற்றிச் சிந்திக்காமல், தேசிய மக்கள் சக்திக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் ஒன்றுபடவேண்டும்.

பண்டுவஸ்நுவர பிரதேசசபையில் தேசிய மக்கள் சக்தி 17 இடங்களை மட்டுமே பெற்றுள்ளது. எதிர்க்கட்சிக்கு 21 இடங்கள் உள்ளன. எனவே, அனைத்து எதிர்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் இந்தச் சபையில் நாம் ஆட்சிய மைக்கமுடியும் - என்றார். (ச-இ)

# கரையொதுங்கும் டொல்பின்கள்

கொழும்பு, மே 17

களுத்துறைக் கடற்கரையில் 6 டொல்பின்கள் நேற்றுமுன்தினம்கரையொதுங்கியுள்ளன. இந்த டொல்பின்கள் ஏதேனுமொரு விபத்தில் சிக்கி இவ்வாறு கரையொதுங்கியிருக்கலாம் என வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக களுத்துறைக் கடல் கொந்தளிப்பாக இருப்பதாக பொலிஸ் உயிர் காப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் கட்டப்பிராயில் 4 பரப்பும் 3 குழியும் வீட்டுடனான காணி விற்பனைக்கு உண்டு.

076 330 9761
WhatsApp: +1 905 923 6664

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ் கானும் ஆட்கள் தேவை.

1. Manager (2 Years Experience)
2. Administration
3. Computet Billingt Cashier
4. Sales Assistant
5. Packing (பொதியிடல்)

ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்
வயது எல்லை 18 - 35
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :- 077 419 5209
077 419 5015

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ் மாவட்ட கூட்டுறவு
அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக
முகாமைத்துவ உத்தியோகத்தர்
**திரு யூ. பிரசாத் அவர்களின்**
அன்பு தந்தையாகிய
அமரர் **அருளப்பு ஒஸ்வேட் யூலியன்**

அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

(CR 45022) D

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவு சங்கம்..

## சங்கிலி...

அந்தப் பெண் சங்கிலியை அறுத்துத் தப்பிச்சென்றபோது, சங்கிலியின் உரிமையாளரால் உடனடியாக விரட்டிப் பிடிக்கப்பட்டார். இதன்போது, அந்தப் பெண் குறித்த சங்கிலியை வேறொரு இளைஞரிடம் கைமாற்றியமை தெரியவந்தது. இதன் பின்னர், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டு, அந்தப் பெண் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
சங்கிலி மீண்டும் கைப்பற்றப்படாத நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (அ-ம-125)

## கப்பல்...

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு குஷ் போதைப்பொருளைக் கடத்தி வந்த இந்திய இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தியாவில் இருந்து நேற்று நண்பகல் அளவில் வருகைதந்த பயணிகள் கப்பலிலேயே அந்த இளைஞர் போதைக் கடத்தலில் ஈடுபட்டுள்ளார். அவரிடம் இருந்து 4 கிலோ குஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)


# KARAVAI CARE

உங்கள் பாசத்துக்குரியவர்களை அன்பாகப் பராமரிப்பதற்கு



## கரவை நலவாழ்வு இல்லத்தினை

தெரிவு செய்து மன நிம்மதியுடன் வாழுங்கள்...

குறுகிய கால தங்குமிட வசதியும் உண்டு

(வெளிநாடுகளிலிருந்து கோவில் திருவிழா, கல்யாணம், விடுமுறைக்கு வருபவர்கள் தங்களது பெற்றோர்களை எமது இல்லத்தில் தங்கவைத்துவிட்டு தங்களது அலுவல்களை மேற்கொள்ளலாம்.)

மனோ/ + 44 773 716 9030
ஜெகன்/ + 94 777 140 090
whatsapp மூலமும் தொடர்புகொள்ளலாம்.

### எமது சேவைகள்

01. தனிப்பட்ட பராமரிப்பு
02. விசேட தேவையுடையோரிற்கான பராமரிப்பு
03. சிறிதளவு மனநல பாதிக்கப்பட்டவருக்கான பராமரிப்பு
04. தொழில்புரிவோருக்காக பகல்நேர பராமரிப்பு
05. மருத்துவ சேவைகள்
06. யோகா மற்றும் தியானம்

ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கோவிற்கடவை பூந்தோட்டம், துன்னாலை மத்தி, கரவெட்டி.

Email:karavaicare@gmail.com
mano8@tiscali.co.uk


# மு/ மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)

**பழைய மாணவ (தாய்ச்) சங்க ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2025**

**காலம் :- 01.06.2025 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் :- முற்பகல் 10.00 மணி**
**இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்**

அனைத்து பழைய மாணவ தாய்ச் சங்க உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
பழைய மாணவர் தாய்ச் சங்கம்.
மு/ மல்லாவி மத்திய கல்லூரி,
(தேசிய பாடசாலை)

(CS 3177) D"

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 04 . 1958



மறைவு 16 . 05 . 2025

## சோமசுந்தரம் சிவபாலன்

மணல் ஒழுங்கை புலோலி மேற்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஓடையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிவபாலன் அவர்கள் நேற்று (16.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-தங்கம்மா தம்பதியின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகப்பர்-மகேஸ்வரி தம்பதியின் மூத்த மருமகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கிரிசாந்தன் (ஆசிரிய வளவாளர், கணினி வள நிலையம், வடமராட்சி), ஆராதனா (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயக்கல்லூரி, பரந்தன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பானுயா, ரகுராம் (வண்ணமயில் புடைவையக உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பூர்விகன், பிருத்விகன், பிரஷான், பவந்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் பாலகிருஷ்ணன், இந்திராதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலகிருஸ்ன்-மகேஸ்வரி தம்பதி, விஜயகுமாரன்-மல்லிகாதேவி தம்பதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விநாயகர் வீதி,**
**அல்வாய் தெற்கு,**
**அல்வாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 226 4671**
**077 211 1148**

# மரண அறிவித்தல்

மலர்வு 02 . 05 . 1951



மறைவு 15 . 05 . 2025

## திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி (ஆசை)

அராலி கிழக்கு, அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்கள் கடந்த (15.05.2025) வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா, அன்னம்மா, வள்ளியம்மை தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், இராசதுரையின் அன்புச் சகோதரியும் தனேஸ்வரன், தர்மராஜா, ரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனியும் சர்மிளா, பிரமிளா ஆகியோரின் அன்புத் தாயாரும் அகிலன், இராமணகிருஷ்ணா ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்மிதா, அஸ்ணவி, அமிரேஷ், வர்ஷித், அக்ஷித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வீமன் காமம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**188/17 பலாலி வீதி,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**075 764 5658**

## கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீசுவரர் சிவாலய பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்-2025

மேற்படி சிவாலயத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 06.06.2025 (வெள்ளிக்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு சிவாலய மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு.நா.பசுபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெறும்.

### நிகழ்ச்சி நிரல்

- இறை வணக்கம்
- தலைமையுரை
- செயலாளர் அறிக்கை வாசித்தல்
- பொருளாளர் அறிக்கை சமர்ப்பித்தல்
- செயற்பாட்டறிக்கை வாசித்தல்
- புதிய அறங்காவலர் சபைத் தெரிவு
- ஆலய வளர்ச்சி தொடர்பாக கலந்துரையாடல்
- நன்றியுரை.

மேற்படி பொதுக் கூட்டத்திற்கு சிவாலயத்தின் அங்கத்தவர்கள், உபயகாரர்கள், சிவனடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

செயலாளர்
உருத்திரபுரீசுவரர் சிவாலய அறங்காவலர் சபை,
உருத்திரபுரம்-கிளிநொச்சி.



## செம்பியன் பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த திருவிழா-2025

- 17.05.2025 கொடியேற்றம் மாலை 05.00 மணிக்கு ஆரம்பமாகும்
- ஆயத்த நாள் வழிபாடுகள் தினமும் மாலை 05.00 மணிக்கு திருச் செபமாலையோடு ஆரம்பமாகும்.
- நற்கருணை விழா 25.05.2025 மாலை 05.00 மணிக்கு திருச்செபமாலையோடு ஆரம்பமாகும்.
- திருவிழா திருப்பலி 26.05.2025 காலை 06.30 மணிக்கு யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை P.J ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.
- திருவிழாவிற்கான பயண ஒழுங்குகள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய பேருந்து நிலையங்களில் ஒழுங்குபடுத்தப்படும்.
- திருவிழா வியாபார நிலைய பிரிவுகள் வரும் ஞாயிறு 18.05.2025 காலை 10.00 முதல் மேற்கொள்ளப்படும் பிரிவுகளை நேரடியாக வந்து பிரிவு செய்யவும்.

**தொடர்புகளுக்கு:**
**076 415 1504, 077 915 4413**

திருவிழா மாலை மரிய சீலன் நாட்டுக் கூத்து ஆலய வளாகத்தில் இடம் பெறும் புனிதரின் ஆசீர் பெற அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

பங்குத் தந்தை, பங்கு மக்கள்,
புனித பிலிப்பு நேரியர் ஆலயம்,
செம்பியன் பற்று.


# Be a Doctor

MalishaEdu | 玛里莎
The Chinese Education Expert

## STUDY MBBS IN CHINA
### FROM A WORLD-LEADING MEDICAL UNIVERSITY

**Admissions Open for Zhejiang University**
**One of China's Top Universities**

**SLMC Recognised**

**Top 50 Globally | Top 03 Domestically**

- Fully English taught curriculum
- 6 Years program with one year internship
- Affordable fees
- Scholarship opportunities for high-performing students

**Deadline: 31st May 2025**
**Apply Now**



For Enquiries: +94706469859, +44 7723 957543
malishaedu.si.ne@gmail.com
www.malishaedu.com

## பாராட்டி வாழ்த்துகிறேன்

பகீரதனாகிய நான்
இணைந்தகணிதம் - A,
பௌதிகவியல் - A, இரசாயனவியல் - A
இனையும் பெற்று மாவட்ட நிலை 62 ஐயும்
பெற்று பொறியியற் பீடத்திற்கு தெரிவாகி
யுள்ளேன். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய

**லோகாசனன் ஆசிரியர்**

அவர்களுக்கு எனது மனமார்ந்த
நன்றிகளை
தெரிவித்துக்கொள்கின்றேன்.




குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேற்றை
பெற இவரை தொடர்புகொள்ளவும். **072 941 2994**

## தேர்வுகள் பிற்போடல்

யாழ்., மே 17
அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் இந்த மாதம் 16, 17, 18 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர்களுக்கான தேர்வுகள் பிற்போடப்பட்டுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் அறிவித்துள்ளது.
பரீட்சைகள் நடைபெறும் திகதி பின்னர் அறியத் தரப்படுமெனவும் சங்கம் குறிப்பிடப்பட் டுள்ளது. (ச-25,66)

### பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் - 2025

**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**

எமது பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டமானது 31.05.2025 சனிக்கிழமை மு.ப 09.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். எனவே, அன்றைய தினம் அனைத்து பெற்றோர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**செயலாளர்**
பாடசாலை
அபிவிருத்திக் குழு

**அதிபர்**
யா/புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம்

### அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.



எமது பாடசாலையின், ஆசிரியர்
**திருமதி**
**நிர்மலஜோதி**
**டொன் பொஸ்கோ**
அவர்கள் இன்று தனது
அறுபதாவது அகவை தினத்தில்
மணி விழாவினைக் கொண்டாடி
மகிழ்கின்றார்.

எமது பாடசாலையில் இரண்டாம் மொழியை அர்ப்பணிப்புடன் கற்பித்து நீண்டகாலம் எம்முடன் இணைந்து பணியாற்றிய இவரைப் பாராட்டி நன்றி கூறி வாழ்த்துத் தெரிவிப்பதோடு, இவர் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழவும் இவரது ஓய்வு காலம் மகிழ்வுடன் சிறக்கவும் என்றென்றும் வாழ்த்துகின்றோம்.

**அதிபர், பிரதி அதிபர் , உபஅதிபர், ஆசிரியர்கள்**
**கல்விசாரா ஊழியர்கள்**
**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**
**யாழ்ப்பாணம்**

### பெயர் மாற்றம்

C/91300 வீட்டுத்திட்டம் நாவற்குழி சந்தி கைதடியில் வசிக்கும் அருள் பிளாக் ஆகிய நான் எனது பெயரை அருள் எஸ்தர் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் அருள் எஸ்தர் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கு அமைவாக மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

அருள் எஸ்தர்

### வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| > மேசன் | Rs. 3000.00 - 3500.00 |
| > மேசன் உதவியாளர் | Rs. 2500.00 - 2700.00 |
| > வெல்டர் | Rs. 3000.00 - 3500.00 |
| > தச்சு வேலை | Rs. 3000.00 - 3500.00 |
| > பெயின்ரர் | Rs. 2500.00 |

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)
தொடர்பு : **0777245399**
(காலை 8.00 - மாலை 6.00 வரை) யாழ்ப்பாணம்
(CS3151) (B) J-1"

### நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகல விதமான மணமகள்கள், மணமகன்கள் உள்நாடு, வெளிநாடு அரச உத்தியோகம், உத்தியோகம் அல்லாதது, செவ்வாய் உள்ளது, இல்லாதது பலதரப்பட்ட ஜாதகங்கள் தாராளம் உண்டு.
நீங்கள் விரும்பியவாறு பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: வி.ஜெயந்தி
**077 973 3183**

### அலுவலக உதவியாளர் தேவை

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்திற்கு ஆண் உதவியாளர் தேவை. 19.05.2025 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுயவிபரக்கோவையுடன் சமூகமளிக்கவும்
**செயலாளர்**

## பொது அறிவித்தல்



முன்பு எமது நிறுவனத்தில் கடமையாற்றிய 74/2, கனகபுரம், கிளிநொச்சியில் வசித்தவருமான **(தே.அ 951002780V) திரு கண்ணுசாமி கேதாரன்** கடந்த வைகாசி 1 ம் திகதி முதல் LAUGFS LUBRICANTS LIMITED நிறுவனத்தின் பணியில் இல்லை என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம். மேலும் LAUGFS LUBRICANTS LIMITED நிறுவனம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என அனைத்து பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் கேட்டுக் கொள்கின்றோம். இவர் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்காது என்பதையும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**LAUGFS LUBRICATS LIMITED**

### வீடு வாடகைக்கு தேவை

யாழ் பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியை தொடரும் பெண் அரச ஊழியருக்கு 1/2 அறை கொண்ட அனெக்ஸ் வாடகைக்குத் தேவை

தொடர்பு: **077 566 9245**

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முதியோர் காப்பகத்திற்கு ஆண்/ பெண் பராமரிப்பாளர், முன் அனுபவமுள்ள மேற்பார்வையாளர் தேவை.
(CR/45004) J-1

**077 712 6860 , 077 712 6859**
**076 252 5725**

### ஆதன உரிமம் தொடர்பான அறிவித்தல்

**நெடுந்தீவு பிரதேச சபை :**
**விண்ணப்பதாரரின் பெயர் : செல்லத்தம்பி மகேசு**
**வட்டாரம் - 11 முகவரி- நெடுந்தீவு கிழக்கு**

வட்டாரம் 11 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் நெடுந்தீவு கிழக்கு இறை 'காரைதென்மேற்குதொம்பு' எனும் பெயருள்ள நிலப்பரப்பு 02 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு திரு.சிவலிங்கம் இளங்கீரன் அவர்களால் எழுதப்பட்ட 17020 ஆம் இலக்க 2024.06.08 ஆம் திகதிய உறுதி மூலம் செல்லத்தம்பி மகேசு என்பவரால் இவ் ஆதனத்தின் உரிமையாளர் தாமே என வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் C.S.லியானகே அவர்களால் வரையப்பட்ட 5581 ஆம் இலக்க 2025.02.18 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் பரப்பு 02 குளி 05.63 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.
வடக்கு - குனரத்தினம் லட்சுமிக்குரிய ஆதனமும்
கிழக்கு - சடையர் பசுபதிக்குரிய ஆதனமும்
தெற்கு - ஒழுங்கை இதடங்கலும்
மேற்கு - வீதி

மேற்குறித்த ஆதனம் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் இவ் ஆதனம் செல்லத்தம்பி மகேசு என்பவருக்கு உரித்துடையதாகும் என்பதுடன் இது தொடர்பாக வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நெடுந்தீவு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**நெடுந்தீவு பிரதேச சபை**
(CR/45019) J-1

## ஆலய...

பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

## பயங்கரவாத...

ளது. இது தொடர்பில் நீதி அமைச்சு தெரிவித்துள்ளதாவது:-

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதானது, நவீன உலகளாவிய பயங்கரவாத சவால்களை எதிர்கொள்வதிலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனிநபர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளைக் கடைப்பிடிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதற்கமைய பொதுமக்களிடம் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை எதிர்வரும் 14 நாள்களுக்குள் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கமுடியும் - என்றுள்ளது. (அ-ம-இ)

## அர்த்தமுள்ள...

டோரின் உறவுகளின் சங்கம் இணை அனுசரணை நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம், பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காணாமலாக்கப்பட்ட எங்களின் குழந்தைகளைத் தேடிவரும் எம்மில் பலர் வயது முதிர்ந்த தாய்மார்களாவர். நாம் இன்னும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்போம் என்பதும் தெரியாது. நாங்கள் கடந்த 16 ஆண்டுகளாக நீதிக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றோம். நாம் உயிருடன் இருக்கும்போது எமக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று விரும்புகின்றோம்.

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகத் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தோம். 3 ஆயிரம் நாள்களைக் கடந்த அந்தப் போராட்டம் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. எம்முடன் போராட்டத்தில் பங்கேற்ற நூற்றுக்கணக்கான பெற்றோர்கள், காணாமற்போன தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமலே மரணித்திருக்கிறார்கள்.

இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறையின் பணியைத் தொடர்வதற்கும், வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் செயற்திறன்மிக்க சர்வதேச விசாரணையை முன்னெடுத்து, குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் ஏற்றவாறான தீர்மானமொன்றை நிறைவேற்றவேண்டும்.

இலங்கையின் உள்ளகப்பொறிமுறையானது பல தசாப்தகாலமாக நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தவறியிருக்கிறது. நாம் இன்னமும் தொடர் இராணுவமயமாக்கல், சட்டவிரோத காணி அபகரிப்பு, தண்டனைவிலக்கீடு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மறுப்பு என்பவற்றுக்கு முகங்கொடுத்துவருகிறோம். எமக்கான அர்த்தமுள்ள நீதியைப் பெற்றுத்தருவதற்கு சர்வதேச சமூகம் ஆக்கபூர்வமான முறையில் செயலாற்றவேண்டிய தருணம் இதுவாகும் - என்றுள்ளது. (அ-எ-இ)

## உலகையே...

முன்னர் அரசாங்கம் திரும்பப்பெறவேண்டும். இல்லையேல் எதிர்வரும் 29ஆம் திகதிமுதல் நாட்டை மட்டுமல்ல உலகையே உலுக்கும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கின் கரையோர பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டும், பலதடவைகள் இடம்பெயர்ந்த காரணத்தாலும் தமது காணிகளுக்கான ஆவணங்களை இழந்துள்ளனர். சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இந்நிலையில் அவர்களது காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி பிரசுரம் உடனடியாக மீளப்பெறவேண்டும் என்றும், மே மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் மீளப்பெறப்படாவிட்டால் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும் நாங்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.

நான் ஏற்கனவே கூறியதைப்போல இது ஒரு கட்சி சார்ந்த நடவடிக்கை அல்ல. இது எங்களுடைய இருப்பின் மிக முக்கியமான கூறாகிய நிலத்தைப் பற்றிய விடயம். நிலம் இருந்தால்தான் இனம் தொடர்ந்து இருக்கலாம். ஆகையினால் இந்த நடவடிக்கைக்கு எதிராக செய்யப்படுகிற போராட்டம் சகலராலும் ஆதரிக்கப்படவேண்டிய போராட்டம். சகல அரசியற் ...சிகளுக்கும் நான் அன்பாக விடுக்கின்ற ஒரு வேண்டுகோள், இதில் இணைந்துகொள்ளுங்கள் என்பதே. ...து அமைப்புக்கள், மக்கள், விசேட ...கப் பாதிக்கப்பட்ட மக்கள் இதில் இணைந்துகொள்ளவேண்டும் - என் (அ-ம-100)

## அநுர...

...ல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

...ம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காண ...யே அவர் இவ்வாறு தெரிவித்துள் ... நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித் ...வது:-

...ய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழர் ...த திருப்திப்படுத்தும் வகையில் ...ற்பட்டால் அதை நாங்கள் எதிர்க் ...வதில்லை. மாறாக, அவர்கள் ...பெயர் விடுதலைப்புலிகளையே ...ப்படுத்தும் வகையில் செயற்பட்ட ... ஆதலால்தான் அரசாங்கத்தின் மீது ... மக்கள் விரக்தியில் உள்ளனர்.

...ங்கத்தின் செயற்பாடுகள் தொடர் ...மிழ் மக்கள் திருப்தி அடைந்திருந் ... உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கில் ...ய மக்கள் சக்தி வென்றிருக்கவேண் ... அவ்வாறு நடக்கவில்லை. வடக்கு ...ள் தமிழ்க் கட்சிகளுக்கே வாக்களித் ...ள்ளனர்.

...க்கில் ஒரு கதையையும், ...தெற்கில் இன்னொரு கதையையும் அநுர அரசாங்கம் கூறிவருகின்றது. தமிழ் மக்களுக்குத் தற்போது தேவையான அளவுக்கு மொழியாளுமை காணப்படுகின்றது. எனவே, அநுர அரசாங்கத்தின் பொய்கள் இனியும் எடுபடாது என்பதே உண்மை - என்றார். (அ-ம-44)

## வாக்கு...

காலத்தில் வழங்கிய உறுதிமொழியை அவர் நிறைவேற்றியுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரம்டன் பகுதியில் இனவழிப்புத் தொடர்பான நினைவாலயத்தை அமைப்பதற்குரிய நடவடிக்கை 2021ஆம் ஆண்டில் ஆரம்பமாகியுள்ளது. இதற்கு அப்போதிருந்தே இலங்கையின் வெளிவிவகார அமைச்சர்களாலும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. கனேடிய வெளிவிவகார அமைச்சரிடமும் இலங்கையின் சார்பில் எதிர்ப்புப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எமது ஆட்சியிலும் இந்த விடயத்தில் மீண்டும் தலையிட்டோம். தடுத்துநிறுத்துவதற்கு முயற்சித்தோம்.

எனினும், அந்தநாட்டு சட்டத்தின் பிரகாரமே அதனை முன்னெடுப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அதேபோல இனவழிப்பு வாரத்துக்கு எதிராக தடை உத்தரவு பெறுவதற்கு கனடாவிலுள்ள அமைப்பொன்று நீதிமன்றத்தை நாடியிருந்தபோதிலும், அந்தக் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பிறகுதான் இந்த நினைவாலயம் அமைக்கப்பட்டது எனக்கூறுவது தவறான கருத்தாகும்.

பிரம்டன் மேயர் வாக்கு வேட்டைக்காகவே தமிழர் இனப்படுகொலை நினைவாலயத்தை அமைத்துள்ளார். அப்பகுதியில் அதிகளவான இலங்கை தமிழர்கள் வாழ்கின்றனர். ஆதலால், தேர்தல் கால வாக்குறுதியை அவர் நிறைவேற்றியுள்ளார். இதனை தடுப்பதற்கு நாம் முயற்சித்தோம்.

புலிகள் அமைப்பு கனடாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். எனவே, வேறொரு அமைப்பின் பெயரில்தான் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இதற்கு எதிராக எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுத்தோம். கனடாவின் புதிய அரசாங்கத்திடமும் தூதுவர் ஊடாக அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது - என்றார்.

பிரம்டன் நகரில், பழமைவாதக் கட்சியின் ஆட்சி காணப்பட்டபோதிலும், இந்த நினைவாலயத்தை அமைக்கும் நடவடிக்கையில், பழமைவாதக் கட்சியினரும், முற்போக்குப் பழமைவாதக் கட்சியினரும், தாராளவாதக் கட்சியினரும் இணைந்தே ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## செம்மணிப்...

செம்மணி - சிந்துபாத்தி மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேசசபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது, மனிதச் சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன. அந்த மனிதச் சிதிலங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நீதிவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமான நிலையில், நேற்றைய இரண்டாம் நாள் அகழ்வின்போதே இந்த மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

முழுமையான என்புத்தொகுதி, மண்டையோடு என்பவற்றுக்கு மேலதிகமாக கை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அகழ்வு செய்யப்படும் பகுதியின் வெவ்வேறு இடங்களில் இருந்து மீட்கப்பட்டதால், அந்த இடம் மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் மூன்றாம் நாள் அகழ்வுப் பணிகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. நீதவான் ஆ.ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளைக் கண்காணிப்பார். அத்துடன், காணாமலாக்கப்பட்டோரைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகளும், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினரும் இன்றும் பிரசன்னமாகவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அமைதிவழிப்...

களுக்குக் கொண்டுசெல்லக்கூடாது என்று வலியுறுத்தி மேற்கொள்ளும் அமைதிப் போராட்டத்தை திசைதிருப்புவதற்கு நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பணியாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பை, பொதியிடலுக்காக மன்னார், புத்தளம் போன்ற வேறு பகுதிகளுக்குக் கொண்டுசெல்லுகின்றனர். இதனால், எமது தொழில்வாய்ப்புகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, பொதியிடலை இங்கேயே மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி நாங்கள் இரண்டு நாள்களாக மிகவும் அமைதியான முறையில் போராட்டம் நடத்தி வருகின்றோம்.

மிகவும் நியாயமான கோரிக்கையை முன்வைத்து மேற்கொள்ளப்படும் எமது அமைதிப் போராட்டத்தை திசைதிருப்பி, பொலிஸாரை அழைத்து பலவந்தமாக அகற்றுவதற்கு உப்பள நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது கண்டிக்கத்தக்கது - என்றனர். (அ-ம-214)

## நுரையீரலில்...

உயிரிழந்துள்ளது. தருண் பிரதீஸ் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு காய்ச்சலும் சளியும் ஏற்பட்டிருந்த நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அந்தக் குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். நுரையீரலில் கிருமித்தாக்கம் ஏற்பட்டதன் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

(அ-ம-26-20)



# பற்றாக்குறையைத் தவிர்க்க மருந்து இருப்புப் பராமரிப்பு

கொழும்பு, மே 17

நாட்டில் நிலவும் மருந்துப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக மருந்துகளின் பாதுகாப்பு இருப்பைப் பராமரிக்க இலங்கை அரசு முடிவுசெய்துள்ளது. கேள்விகோரல் இரத்து மற்றும் தர ஆய்வுகளைத் தொடர்ந்து மருந்துப்பொருள்கள் நிராகரிக்கப்பட்டமை போன்ற தொடர்ச்சியான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் விதமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

சமீபத்திய மாதங்களில் மருந்துப் பற்றாக்குறைக்கு இந்தப் பிரச்சினைகள் வழிவகுத்துள்ளன.

திட்டமிடப்பட்ட அவசரகால இருப்பு ஆறு மாத காலத்துக்கு நாட்டின் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருக்கும்.

நிலையான விநியோகத்தை உறுதி செய்வதற்காக, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் அரசாங்கங்களுடனான ஒப்பந்தங்கள் மூலம் அரசாங்கம் நேரடியாக மருந்துகளை இறக்குமதிசெய்யத் திட்டமிட்டுள்ளது. இது போன்ற இடையக இருப்பைப் பராமரிப்பதன் மூலம், திறந்த சந்தையில் இருந்து மருந்துகளை வாங்குவதன்மூலம் தற்போது ஏற்படும் கூடுதல் செலவுகளையும் கணிசமாகக் குறைக்கமுடியும்.

இந்த முயற்சியை முறைப்படுத்தி செயற்படுத்த விரைவில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

(ச-இ)


## பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை

- 19-45 வயதுடைய, பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய,தேக ஆரோக்கியமுள்ள, ஆடு, மாடு மேய்த்தலில் அனுபவம் உள்ள ஆண்வேலையாட்கள் வேலைக்குத் தேவை.
- போதைப் பழக்க வழக்கம் அற்றவர்கள் மட்டும் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.
- அடிப்படைச் சம்பளம் மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் 5நாட்கள் விடுமுறை உள்ளடங்கலாக மாதச்சம்பளம் 67000+EPF+ETF வழங்கப்படும்.

இடம்:- கெற்பேலி மத்தி,மிருசுவில்.

தொடர்பு:- 076 200 1700

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு



சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறிட் கலவையை தாங்கி நிற்கும் ஜக் முட்டுக்கள் (Steel Props) 10.5 Kg எடை கொண்டது இப்பொழுது எம்மிடம்.
இதை விட எடை குறைந்ததும், தரம் குறைந்ததும் சந்தையில் இருப்பதால் உங்கள் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ் அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க்கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.

காணியின் பரப்பு - 5 பரப்பு

தொடர்பு: 076 755 8606
077 638 5683

(CS 58259) E-1


# ஹரி ஆனந்தசங்கரிக்கு போராளிகள் கட்சி வாழ்த்து

யாழ்ப்பாணம், மே 17

கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள, ஈழத்தமிழரான ஹரி ஆனந்தசங்கரிக்கு ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மின்னஞ்சல் மூலம் அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில்,

பேரினவாதக் கொள்கைகாளாலும் பல அடக்குமுறை ஆதிக்கத்தாலும் தொடர்ந்தும் சொந்த நிலத்தில் ஒடுக்கப்பட்டுவரும் நம்மவர்களின் நேரடிப் பிரதிநிதியான தங்களின் வெற்றி காலத்தின் பதிவாகும். எமது உணர்வுகளோடு நெருக்கமான, எங்களில் ஒருவராக இருக்கும் நீங்கள் உங்கள் இயலுமைக்கு உட்பட்டு ஈழத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு என்றும் குரல் கொடுப்பீர்கள் என நம்பிக்கைகொள்கிறோம்- என்றுள்ளது.

(ச-25,27)


## கண்ணீர் அஞ்சலி



யா/ யூனியன் கல்லூரி 96 A/L பழைய மாணவி

திருமதி பிரபாகரன் பாமினி அவர்களின் தாயார்

**திருமதி. பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி**

அவர்கள் கடந்த 15.05.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நாங்கள் மிகவும் வேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயர் பகிரும்

யா/ யூனியன் கல்லூரி நண்பர்கள் குழு

( 96 உயர்தரம்)

(CS/58260) J-1


## விளையாட்டு விழா

பளை தம்பகாமம் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டு விழா கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.சி.எஸ்.கே. குலரத்ன, கௌரவ விருந்தினர்களாக தம்பகாமம் கிராம அலுவலர் திருமதி சு.ஜீவிதா, தம்பகாமம் பிரதேசசபை உறுப்பினர் சு.சுரேன், பச்சிலைப்பள்ளி இளைஞர் சேவைகள்மன்ற உத்தியோகத்தர் எஸ்.சுஜிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச- 25,9)

## கரைச்சிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு



கிளிநொச்சி, மே 17

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச அரசார்பற்ற நிறுவனங்களால் மக்கள் குடியிருப்புகளில் டெங்கு நுளம்புப் பரிசோதனைகள் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டன. இதன்போது கிளிநொச்சி நகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கஜேந்திரா தலைமையிலான குழுவினரால் டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பான தெளிவூட்டல்களும் மற்றும் டெங்கு நோய் பரவக்கூடிய வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்தோருக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டதுடன் சிலருக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

(ச-25, 113)


## காணி விற்பனைக்கு

யாழ் கல்வியங்காட்டில் G.P.S விளையாட்டரங்கிற்கு முன்னால் 11 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0740752069

## காணி தேவை

யாழ் மாநகர் எல்லைக்குட்பட்ட பகுதிகள் Car Wash செய்வதற்கு ஒரு பரப்பு காணி தேவைப்படுகின்றது. இடம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 646 6701




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.